2023 ஏப்ரல் 20]

கோரிக்கை நியாயமானதுதான். Polytechnic–ல் மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். 2010–2011–ல் நான்தான் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்தேன். அப்போது தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 1,16,687 பேர் தமிழ்நாட்டில் மொத்தம் Polytechnic–ல் சேர்ந்திருந்தார்கள். ஆனால், அது பத்து ஆண்டுகளில், 2020–2021–ல் 59,350 ஆக குறைந்துள்ளது. அதை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழக முதலமைச்சர் அவர்கள், 'நான் முதல்வன்' என்ற திட்டத்தையும், 'புதுமைப் பெண்' திட்டத்தையும் அறிவித்ததன் விளைவாக இப்போது மீண்டும் அது, இந்த இரண்டு வருடங்களில் மட்டும் 12,090 உயர்ந்திருக்கிறது. ஆகவே, தமிழக முதலமைச்சர் எடுக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக, 4.0 தரத்திற்கு தொழில் துறையினுடைய தரத்திற்கேற்ப Polytechnic கல்லூரிகளை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, தொழிற்சாலைகளோடு அவர்கள் சேர்ந்து செயல்படவேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் அடிப்படையில் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், 44 கோடி ரூபாய் செலவாகிறது. ஆகவே, நிதிநிலையையும் பொறுத்து, அங்கே மாணவர்கள் மற்ற கல்லூரிகளில் சேருகின்ற எண்ணிக்கையையும் பொறுத்து, உங்களுடைய கோரிக்கை வருங்காலத்தில் மாண்புமிகு முதல்வரிடம் சொல்லி, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

193—

வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***13870—திரு. A.J. மணிக்கண்ணன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[*2023 ஏப்ரல் 20*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை தொகுதி, உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் 1–3–2006 அன்று கட்டடப்பட்டு, தற்போது வரை நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மிகக் குறுகிய இடத்தில் இருக்கிறது. அங்கு போதுமான வசதிகள் இல்லை. ஆகவே, வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தைக் கூடுதல் வசதிகளுடன் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, செங்குறிச்சி குறு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் இருக்கின்றது. அதிலும் போதுமான கட்டட வசதியில்லை. ஆகவே, அதற்கும் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், திருநாவலூர், எலவனாசூர்கோட்டை, களமருதூர், எறையூர், உளுந்தூர்பேட்டை குறு வட்டாட்சியர் அலுவலகங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவற்றைப் பழுது நீக்கம் செய்து தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிக்கண்ணன், இன்னொரு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பிருக்கிறது. முதலில், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதிலைப் பெற்றுக்கொள்ளுங்கள். மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டில் கட்டடப்பட்ட கட்டடங்களை பழைய* design*–ல் கட்டியிருக்கிறார்கள்.*

2023 ஏப்ரல் 20]

தற்போது கட்டப்படும் கட்டடங்களை சகல வசதிகளுடன் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையேற்று வட்டாட்சியர் அலுவலகத்திற்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் நிச்சயமாக எடுக்கும். மேலும், நிதிநிலைமைக்கேற்ப புதிதாக கட்டடங்கள் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.J. மணிக்கண்ணன் அவர்கள்.*

திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட்டாட்சியர் அலுவலர்கள்,* quarters *கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதனையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, அந்த அலுவலகங்களிலுள்ள* Jeep *மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. ஆகவே, புதிய* Jeep *வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையினையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல கிராமங்களில் கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் இல்லை. அது தொடர்பான கோரிக்கையினைத் தங்களிடம் கடிதமாக வழங்குகின்றேன். அவற்றையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்கள் நிறைய இடங்களில் இல்லை என்பது உண்மை. இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறோம். எதிர்காலத்தில் எல்லா பகுதிகளிலும் கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்கள் கட்டுவதற்கு வேண்டிய பணிகளைச் செய்யவிருக்கிறோம். எந்தெந்தப் பகுதிகளில்* RDO, DRO, RI office buildings *இல்லை என்பது குறித்த கணக்குகளை எடுத்திருக்கிறோம். அதற்கு வேண்டிய கட்டடங்கள் கட்டுவதற்கான முயற்சிகளையும் நாங்கள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.*